# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2178/5 - 2020 ජූනි මස 01 වැනි සඳුදා - 2020.06.01

*2178/5 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### *மாகாண சபை அறிவித்தல்கள்*

**சபரகமுவ மாகாண மாகாண சபை**

*2020.01.01 தொடக்கம் 2020.04.30 வரை வரவு செலவு மதிப்பீடு*

***1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 27(அ) பிரிவின் கீழ் கௌரவ ஆளுநர் அவர்களின் உத்தரவின்படி மாகாண சபை நிதியத்திலிருந்து செலவினங்களை மேற்கொள்வதற்காக ஒழுங்கு செய்யப்பட்டது.***

**அறிவித்தல்**

*சபரகமுவ மாகாண மாகாண சபை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சபரகமுவ மாகாணத்தின் ஆறாவது மாகாண சபையின் பதவிக்காலம் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியுடன் முடிவடைந்தமையினால் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 27(அ) பிரிவின்படி எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் உத்தரவளித்தல்*

*2020 ஆண்டின் சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வரையிலான நான்கு மாத கால எல்லைக்குள் சேவைச் செலவினங்களுக்காக ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவைச் செலவினங்களுக்காக சபரகமுவ மாகாணத்திற்குள் கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்த கால எல்லைக்குள் சபரகமுவ மாகாண சபையின் சில முயற்சிகள் தொடர்பில் நிதி ஏற்பாடு செய்வதற்கும் அத்தகைய முயற்சிகளின் செலவினங்களுக்காக மேற்குறித்த கால எல்லைக்குள் தேவைப்படும் பணங்களை சபரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணங்களாகச் செலுத்துவதற்கு இடமளிப்பதற்கும், சபரகமுவ மாகாண சபையின் நிதியத்திற்கு அப்பணத் தொகைகளை மீளச்செலுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் முற்கூறிய கருமங்களுடன் தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான வொரு கட்டளையாகும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சபரகமுவ மாகாணத்தின் ஆளுநர் ஆகிய என்னால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.*




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

உத்தரவைப் பெற்றுக் கொடுத்தல்

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சபரகமுவ மாகாணத்தின் ஆறாவது (6) மாகாண சபையின் பதவிக்காலம் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதியுடன் முடிவடைந்தமையினால் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 27(அ) பிரிவின்படி எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியுடன் ஆரம்பமாகி 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியுடன் முடிவடையும் நான்கு மாதகால எல்லைக்காக சபரகமுவ மாகாண சபையின் சேவைச் செலவினங்களுக்காகத் தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பத்தாயிரத்து அறுநூற்றி ஐம்பத்தைந்து மில்லியன்களும் எண்ணூற்றி நாற்பதாயிரம் ரூபாவான (ரூபா 10,655,840,000.00) சபரகமுவ மாகாண சபையின் செலவினங்களை சபரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு அந்த மாகாணத்தின் பிரதான செயலாளருக்கும் கணக்கீட்டு அலுவலர்களுக்கும் இத்தால் உத்தரவளிக்கின்றேன்.

2020 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான ஒதுக்கீடுகள்

2. (1) ஏதாவதொரு பணத்தொகையைச் செலவிடுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற, வேறு சட்டமெதற்கும் பங்கமேற்படாமல் இக்கட்டளையில் "நான்குமாத காலஎல்லை" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதியுடன் ஆரம்பமாகி 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடையும் கால எல்லையின் சேவைச் செலவினங்களுக்காகத் தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பத்தாயிரத்து அறுநூற்று ஐம்பத்தைந்து மில்லியன்களும் எண்ணூற்றி நாற்பதாயிரம் ரூபாவான (ரூபா 10,655,840,000.00) சபரகமுவ மாகாண சபையின் செலவினங்களை:-

(அ) சபரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணங்களாகச் செலுத்து வதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்ற கொடுப்பனவுகள் மூலமும்; அத்துடன்

(ஆ) சபரகமுவ மாகாணத்திற்குள் கடன்களாகப் பெற்றுக் கொள்ளும் பணங்களிலிருந்து அல்லது சபரகமுவ மாகாண சபைக்காக பெற்றுக் கொள்வதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்ற கடன்களாகப் பெற்றுக் கொள்ளும் பணங்களிலிருந்து செலுத்தப்படல் வேண்டும். இங்கு மேலே குறிப்பிடப்பட்ட பத்தாயிரத்து அறுநூற்று ஐம்பத்தைந்து மில்லியன்களும் எண்ணூற்று நாற்பதாயிரம் ரூபாவான (ரூபா 10,655,840,000.00) பணத்தொகை இக்கட்டளையின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் சபரகமுவ மாகாண சபைக்காகவும் அது தொடர்பில் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற வேறு ஏதேனும் எழுத்துமூலமான சட்டத்திற்குப் பங்கமின்றிப் பயனுடையதாதல் வேண்டும்.

2020 முதல் நான்கு மாத கால எல்லைக் காக சபரகமுவ மாகாண சபையின் சில விவகாரங்கள் தொடர்பில் நிதி வழங்குதல்.

3. (1) 2020 நிதியாண்டின் முதல் நான்கு மாத கால எல்லைக்குள் இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் IV நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் சபரகமுவ மாகாண சபை பெறும் VI ஆம் நிரையில் குறிப்பிடப்பட்ட பெறுகைகள் அத்தகைய முயற்சியின் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு வரவு வைக்கப்பட்ட பெறுகைகளின் கூட்டுமொத்தத் தொகையானது, VI நிரையில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைக்குக் குறைவடையாதிருத்தல் வேண்டும்.

4. இக்கட்டளையில் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சி தொடர்பிலும் 2020 நிதியாண்டின் முதல் நான்கு மாத காலஎல்லைக்குள் சபரகமுவ மாகாண சபையினால் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் அந்த கால எல்லைக்குள் அத்தகைய முயற்சியின் மூலம் சபரகமுவ மாகாண சபை பெறும் பெறுகைகளிலிருந்து செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறாயினும் அச்செலவினங்கள் அந்த அட்டவணையின் V ஆம் நிரையின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

5. இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஏதாவவொரு முயற்சி தொடர்பில் 2020 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலஎல்லையின் இறுதியில் பாக்கியாகவுள்ள பற்று நிலுவைத் தொகையானது, அந்த அட்டவணையின் VII ஆம் நிரையின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு தொகையானது, அந்த அட்டவணையின் VII ஆம் நிரையின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். மேலும் அத்தகைய கால எல்லையின் இறுதியில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புக்கள் VIII ஆம் நிரையின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

6. 2020 நிதியாண்டின் முதல் நான்கு மாத காலஎல்லைக்குள் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு முயற்சியின் மூலம் சபரகமுவ மாகாண சபை பெறும் பெறுகைகள் அத்தகைய முயற்சி தொடர்பில் சபரகமுவ மாகாண சபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை நிவர்த்தி செய்வதற்குப் போதாமையாக இருப்பின் அத்தகைய செலவினங்களை நிவர்த்தி செய்வதற்காகவென ஆளுநர் அவர்களால் கருதப்படும் பணத்தொகை சபரகமுவ மாகாண நிதியத்திலிருந்து அல்லது முற்பணங்களாகச் செலுத்தப்படல் வேண்டுமென அவர்களால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படலாம். ஆயினும் அவ்வாறு கொடுக்கப்படும் முற்பணக் கணக்குகளின் கூட்டு மொத்தத் தொகையானது, அந்த அட்டவணையின் ஐந்தாம் நிரையின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய செலவின எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். மேற்கூறிய முயற்சி சார்பில் முற்பணமாக அவ்வாறு கொடுக்கப்பட்ட பணம் எதுவும் என்னால் கட்டளையொன்றின் மூலம் விதிக்கப்படும் வகையில் சபரகமுவ மாகாண சபையின் நிதியத்திற்கு மீளச் செலுத்தப்படல் வேண்டும்.

*2020 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத கால எல்லைக்குள் 3 ஆம் பிரிவில் குறிப் பிடப்பட்டுள்ள முயற்சிகள் தொடர் பிலான செலவினங் களுக்காக சபரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது பணங் களிலிருந்து முற்பணம் செலுத்தல்.*

7. (1) இக்கட்டளையின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டுவரும் செலவினங்களுக்கு அந்த அட்டவணையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட ஆனால் செலவு செய்யப்படாத அல்லது எதிர்காலத்திலும் செலவாகாதென எதிர்ப்பார்க்கக்கூடிய ஏதாவதொரு பணத்தொகை அந்த நிகழ்ச்சித் திட்டத்திலேயே ஆக்கப்பொருட் செலவினங்களாக அல்லது ஏனையவொரு நிகழ்ச்சித்திட்டத்தின் மீண்டு வரும் அல்லது ஆக்கப்பொருள் செலவினங்களாகப் பகிர்வதற்கு பிரதான செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவராயினுமொரு உத்தியோகத்தரின் கட்டளையின்படி மாற்றப்படலாம்.

*நிகழ்ச்சித்திட்டம் மீண்டுவரும் செல வினங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் செலவிடப் படாத பணத்தொகை களை அந்த நிகழ்ச்சித் திட்டத்திலேயே ஏனையவொரு ஒதுக் கத்திற்கு அல்லது அத்தலைப்பின் கீழான ஏனையவொரு நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாற்றம் செய்யும் அதிகாரம்.*

(2) இக்கட்டளையின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தலைப்பின் கீழ் காட்டப் பட்டுள்ள ஆக்கப்பொருள் செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்டவொரு பணத்தொகை அத்தலைப்பின் நிகழ்ச்சித் திட்டத்திற்கு அல்லது கருத்திட்டத்திற்கு வெளியே மாற்றம் செய்யும் நடவடிக்கை பிரதான செயலாளரால் மாத்திரமே மேற்கொள்ளப்படலாம்.

8. (1) அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களை மேற்கொள்வதற்குவரிகள் மற்றும் ஏனைய மூலங்களிலிருந்து பெறும் பெறுகைகள், எதிர்ப்பார்க்கப்பட்ட பணத்தொகைகளைவிடக் குறைவடையலாம் என்பதற்கு: அல்லது

(2) ஏதாவதொரு குறிப்பிட்ட பணிக்காக அல்லது பணிகளுக்காக முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாதென ஆளுநர் திருப்பியடையும் சந்தர்ப்பமொன்றில், சபரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழ் செலவு செய்வதற்காக முன்னர் விடுவிக்கப்பட்ட பணத்தொகைகள் முழுமையாக ஆளுநர் அவர்களால் நீக்கிக்கொள்ளப்படலாம்.

9. ஆளுநர் அவர்களால் :-

(அ) இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் V ஆம் நிரையில், VII ஆம் நிரையில் மற்றும் VIII ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும்,

(ஆ) இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் VI ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைகளுள் எதனையும்,

கட்டளைகள் மூலம் 2021 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் வேறுபடுத்தப் படலாம் அல்லது மாற்றம் செய்யப்படலாம்.

*இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய மற்றும் ஆகக் குறைந்த எல்லைகளை மாற்றம் செய்தல் தொடர்பில் ஆளுநருக்கு உள்ள அதிகாரம்.*

இப்பிரிவின் கீழ் இடப்பட்ட கட்டளைகள் எதுவும் ஆளுநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டிருந்தலன்றி செல்லுபடியற்றதாதல் வேண்டும்.

அத்தகைய கட்டளையொன்று எத்தினத்தில் இடப்படுகின்றதோ அத்தினத்திற்கு முன்னாலானவொரு தினத்திலிருந்து அது செல்லுபடியாதல் வேண்டுமென அதில் கூறப்பட்டே குறிப்பிடப்பட்டிருக்குமாயின் அவ்வாறு கூறப்பட்டு குறிப்பிடப்படும் திகதியிலிருந்து அது செல்லுபடியானதாகக் கருதப்படல் வேண்டும்.

10. ஆளுநர் அவர்களால் எழுத்திலான கட்டளையொன்றின் மூலம் இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் பொருத்தமான நிரைகளுக்கு ஏதேனுமொரு முயற்சியைச் சேர்ப்பதன் மூலமும் அத்துடன் :-

(அ) அந்த முயற்சி தொடர்பிலான எல்லா ஆகக்கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் ஏதாவதொரு எல்லையையும்,

(ஆ) அத்தகைய முயற்சி தொடர்பிலான ஆகக்குறைந்த எல்லையையும் சேர்ப்பதன் மூலமும் அந்த அட்டவணை திருத்தம் செய்யப்படலாம்.

11. இந்த உத்தரவு சபரகமுவ மாகாணத்தின் (7) ஆம் மாகாண சபைக்கூட்டம் நடத்துவதற்காக அழைக்கப்படும் திகதியில் அல்லது மாகாண சபையின் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும் திகதியில் அல்லது அத்திகதியில் இருந்து மூன்று (03) மாத காலஎல்லை முடிவடையும் திகதியில் அல்லது 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியில் அல்லது அவ்விரண்டு தினங்களுள் முதலில் வரும் திகதியில் முடிவடையும்.

டிக்கிரி கொப்பேகடுவ,
கௌரவ ஆளுநர்,
சபரகமுவ மாகாணம்.

2019, நவெம்பர் 29.

**இரண்டாம் அட்டவணை**

முற்பணக் கணக்கு விவகாரங்கள்

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | விடய இலக் கம் | முற்பணக் கணக்கு வகை | செலவி னங்களின் உச்ச எல்லை | பெறுகை களின் ஆகக் குறைந்த எல்லை | பற்று நிலுவை களின் உச்ச எல்லை | வரவு களின் உச்ச எல்லை |
| | கூட்டுமொத்தம் | | | 680,770,000 | 297,770,000 | 3,928,800,256 | 1,120,000 |
| | **மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்** | | **உப மொத்தம்** | **634,830,000** | **271,380,000** | **3,916,660,256** | - |
| 1 | கௌரவ ஆளுநர் அவர்கள் | 80001 | மா.அ.உ. முற்பணம் | 670,000 | 240,000 | 6,422,890 | - |
| 2 | மாகாண சபைச் செயலகம் | 80101 | மா.அ.உ. முற்பணம் | 670,000 | 270,000 | 6,447,000 | - |
| 3 | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | 80201 | மா.அ.உ. முற்பணம் | 470,000 | 270,000 | 4,786,700 | - |
| 4 | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | 80301 | மா.அ.உ. முற்பணம் | 340,000 | 170,000 | 3,313,355 | - |
| 5 | பிரதான செயலாளர் | 80401 | மா.அ.உ. முற்பணம் | 10,000,000 | 4,700,000 | 72,300,000 | - |
| 6 | பிரதிப் பிரதான செயலாளர் (திட்டமிடல்) | 80701 | மா.அ.உ. முற்பணம் | 1,700,000 | 800,000 | 9,803,400 | - |

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | விடய இலக்கம் | முற்பணக் கணக்கு வகை | செலவினங்களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை | பற்று நிலுவைகளின் உச்ச எல்லை | வரவுகளின் உச்ச எல்லை |
| 7 | பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியற் சேவைகள்) | 80801 | மா.அ.உ. முற்பணம் | 8,000,000 | 2,400,000 | 87,600,000 | - |
| 8 | மாகாண வருமானத் திணைக்களம் | 80901 | மா.அ.உ. முற்பணம் | 1,700,000 | 850,000 | 13,350,000 | - |
| 9 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார, உள்நாட்டு வைத்தியம், மகளிர் விவகாரம், கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81001 | மா.அ.உ. முற்பணம் | 3,100,000 | 1,900,000 | 27,400,000 | - |
| 10 | சுகாதாரத் திணைக்களம் | 81101 | மா.அ.உ. முற்பணம் | 124,000,000 | 50,000,000 | 958,943,911 | - |
| 11 | ஆயுர்வேத திணைக்களம் | 81201 | மா.அ.உ. முற்பணம் | 9,400,000 | 5,000,000 | 66,400,000 | - |
| 12 | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | 81301 | மா.அ.உ. முற்பணம் | 3,000,000 | 1,500,000 | 19,500,000 | - |
| 13 | உள்ளூராட்சித் திணைக்களம் | 81401 | மா.அ.உ. முற்பணம் | 1,900,000 | 1,000,000 | 16,900,000 | - |
| 14 | மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய அடிப்படை வசதிகள், சுற்றுலாத் துறை, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | 82001 | மா.அ.உ. முற்பணம் | 900,000 | 440,000 | 7,460,000 | - |
| 15 | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் | 82101 | மா.அ.உ. முற்பணம் | 670,000 | 200,000 | 4,470,000 | - |
| 16 | சமூக நலன்புரி, நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு | 83001 | மா.அ.உ. முற்பணம் | 3,500,000 | 1,700,000 | 24,793,000 | - |
| 17 | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 83101 | மா.அ.உ. முற்பணம் | 4,400,000 | 3,300,000 | 26,100,000 | - |
| 18 | நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் | 83201 | மா.அ.உ. முற்பணம் | 3,700,000 | 1,500,000 | 26,700,000 | - |
| 19 | கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு | 84001 | மா.அ.உ. முற்பணம் | 4,000,000 | 940,000 | 27,560,000 | - |
| 20 | கல்வித் திணைக்களம் | 84101 | மா.அ.உ. முற்பணம் | 434,000,000 | 184,000,000 | 2,400,000,000 | - |

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | விடய இலக்கம் | முற்பணக் கணக்கு வகை | செலவினங்களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை | பற்று நிலுவைகளின் உச்ச எல்லை | வரவுகளின் உச்ச எல்லை |
| 21 | காணி, மாகாண நீர்ப்பாசன, விவசாய, விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதார, மீன்பிடித் தொழில் அமைச்சு | 85001 | மா.அ.உ. முற்பணம் | 840,000 | 500,000 | 13,340,000 | - |
| 22 | காணி ஆணையாளர் திணைக்களம் | 85101 | மா.அ.உ. முற்பணம் | 2,200,000 | 1,400,000 | 14,300,000 | - |
| 23 | விவசாயத் திணைக்களம் | 85201 | மா.அ.உ. முற்பணம் | 10,000,000 | 5,000,000 | 51,000,000 | - |
| 24 | விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதாரத் திணைக்களம் | 85301 | மா.அ.உ. முற்பணம் | 5,000,000 | 2,900,000 | 22,100,000 | - |
| 25 | மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் | 86101 | மா.அ.உ. முற்பணம் | 670,000 | 400,000 | 5,670,000 | - |
| | ஏனைய முற்பணக் கணக்குகள் | | உப மொத்தம் | 45,940,000 | 26,390,000 | 12,140,000 | 1,120,000 |
| 26 | மாகாண சபைச் செயலகம் | 80102 | மா.ச. உறுப்பினர்களுக்கான பலவின முற்பணங்கள் | 8,800,000 | 700,000 | 8,000,000 | - |
| 27 | முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம் புஸ்ஸெல்ல. | 80502 | பயிற்சி நிலைய முற் பணக் கணக்குகள் | 3,700,000 | 3,200,000 | 670,000 | 20,000 |
| 28 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி சுகாதார, உள்நாட்டு வைத்தியம், மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் சயம விவகார அமைச்சு | 81002 | கணினிக் கருத்திட்டம் | 600,000 | 50,000 | 100,000 | 40,000 |
| 29 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி சுகாதார, உள்நாட்டு வைத்தியம், மகளிர் விவகாரம், கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் சயம விவகார அமைச்சு | 81003 | பின்னவல இப்பெரணிகம தொணிப்பொருள் பூங்கா முற்பணக் கணக்கு | 2,900,000 | 1,000,000 | 300,000 | 270,000 |
| 30 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி சுகாதார, உள்நாட்டு வைத்தியம், மகளிர் விவகாரம், கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81004 | சப்பிரகமுவ மாகாண அரசாங்க மண்டப முற்பணக் கணக்கு | 1,400,000 | 670,000 | 70,000 | 70,000 |

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | விடய இலக்கம் | முற்பணக் கணக்கு வகை | செலவினங்களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை | பற்று நிலுவைகளின் உச்ச எல்லை | வரவுகளின் உச்ச எல்லை |
| 31 | ஆயுர்வேத திணைக்களம் | 81202 | பின்னவல பஞ்சகர்ம வைத்திய நிலையத்தை ஸ்தாபித்தல் | 940,000 | 270,000 | 320,000 | 140,000 |
| 32 | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 83102 | நெசவுத் தொழில் நிலையங்களை ஸ்தாபித்தல் மற்றும் நிருவகித்தல் | 11,000,000 | 9,400,000 | 840,000 | 170,000 |
| 33 | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 83103 | சிறிய கைத்தொழில் நிலையங்களை ஸ்தாபித்தல் மற்றும் நிருவகித்தல் | 2,500,000 | 1,700,000 | 1,200,000 | 170,000 |
| 34 | கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு | 84002 | மனேரிபிடிய – அட்டுலுகம கல்வி அபிவிருத்தி நிலைய முற்பணக்கணக்கு | 8,700,000 | 6,000,000 | 670,000 | 170,000 |
| 35 | விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதாரத் திணைக்களம் | 85302 | உந்துகொட கால் நடை அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலைய முற்பணக் கணக்கு | 5,400,000 | 3,400,000 | 170,000 | 70,000 |

**தத்துவ அதிகாரம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆறாவது (6) மாகாண சபையின் பதவிக்காலம் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியுடன் முடிவடைந்தமையினால் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 27(அ) பிரிவின்படி எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியுடன் ஆரம்பமாகி 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியுடன் முடிவடையும் நான்கு மாதகால எல்லைக்காக சப்பிரகமுவ மாகாண சபையின் சேவைச் செலவினங்களுக்காகத் தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பத்தாயிரத்தி அறுநூற்றி ஐம்பத்தைந்து மில்லியன்களும் எண்ணூற்றி நாற்பதாயிரம் ரூபாவான (ரூபா 10,655,840,000) சப்பிரகமுவ மாகாண சபையின் செலவினங்களை சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு அந்த மாகாணத்தின் பிரதான செயலாளருக்கும் கணக்கீட்டு அலுவலர்களுக்கும் இத்தால் உத்தரவளிக்கின்றேன்.*

*இந்த உத்தரவு சப்பிரகமுவ மாகாணத்தின் (7) ஆம் மாகாண சபைக்கூட்டம் நடத்துவதற்காக அமைக்கப்படும் திகதியில் அல்லது மாகாண சபையின் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும் திகதியில் அல்லது அத்திகதியில் இருந்து மூன்று (03) மாத காலஎல்லை முடிவடையும் திகதியில் அல்லது 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியில் அல்லது அவ்விரண்டு தினங்களுள் முதலில் வரும் திகதியில் முடிவடையும்.*

*2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இடைக்கால அங்கீகரிக்கப்பட்ட கணக்கின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள அளிப்புகள் மற்றும் 2019 ஆம் ஆண்டின் வருமான இலக்குகளின் மூன்றில் ஓர் அளவிலான பெறுகைகளை அடிப்படையாகக் கொண்டு (2020 ஆம் ஆண்டின் முதற் காலாண்டிற்கு வருமான இலக்குகள் பெற்றுக் கொடுக்கப்படாதுள்ளமையினால்) இடைக்கால அங்கீகரிக்கப்பட்ட கணக்கொன்றின் வடிவில் இந்த மதிப்பீடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமையினால் 2020 ஆம் ஆண்டின் முதற் காலாண்டிற்குள் திறைசேரியினால் பெற்றுக் கொடுக்கப்படும் அளிப்புகளுக்காக முன் பணம் மற்றும் சேகரிக்கப்படும் ஆகக்கூடிய வருமானங்களை மாத்திரம் செலவிடுவதற்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.*

டிக்கிரி கொப்பேகடுவ,
கௌரவ ஆளுநர், சப்பிரகமுவ மாகாணம்

*2019, நவெம்பர் 29.*

**தத்துவ அதிகாரம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆறாவது (6) மாகாண சபையின் பதவிக்காலம் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியுடன் முடிவடைந்தமையினால் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 27(அ) பிரிவின்படி எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியுடன் ஆரம்பமாகி 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியுடன் முடிவடையும் நான்கு மாதகால எல்லைக்குள் சப்பிரகமுவ மாகாண சபையின் முற்பணக் கணக்கு விவகாரங்களுக்காக தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இங்கு (II) ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செலவினங்களை சப்பிரகமுவ சபரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து மேற்கொள்வதற்கு அந்த மாகாணத்தின் பிரதான செயலாளருக்கும் கணக்கீட்டு அலுவலர்களுக்கும் இத்தால் உத்தரவளிக்கின்றேன்.*

*இந்த உத்தரவு சப்பிரகமுவ மாகாணத்தின் (7) ஆம் மாகாண சபைக்கூட்டம் நடத்துவதற்காக அழைக்கப்படும் திகதியில் அல்லது மாகாண சபையின் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும் திகதியில் அல்லது அத்திகதியில் இருந்து மூன்று (03) மாத காலஎல்லை முடிவடையும் திகதியில் அல்லது 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியில் அல்லது அவ்விரண்டு தினங்களுள் முதலில் வரும் திகதியில் முடிவடையும்.*

டிக்கிரி கொப்பேகடுவ,
கௌரவ ஆளுநர், சப்பிரகமுவ மாகாணம்

*2019, நவெம்பர் 29.*

*06 - 90*